# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


இயேசு அவர்களுடைய தீய நோக்கத்தை அறிந்துகொண்டு, "வெளி வேடக்காரரே, ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? வரி கொடுப்பதற்கான நாணயம் ஒன்றை எனக்குக் காட்டுங்கள்" என்றார். அவர்கள் ஒரு தெனாரியத்தை அவரிடம் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களிடம், "இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை?" என்று கேட்டார். அவர்கள், "சீசருடையவை" என்றார்கள். அதற்கு அவர், "ஆகவே சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" என்று அவர்களிடம் கூறினார். (மத் 22:18-21)



# வன்முறை மற்றும் போர் எந்த தீர்வுக்கும் வழிவகுக்காது

## திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்து

மோதல்கள் மற்றும் போர்கள் எந்தத்தீர்வுக்கும் வழிவகுக்காது, மாறாக மரணத்தையும் அழிவையும் மட்டுமே கொண்டு வருகின்றன. எனவே போரை, ஆயுதங்களை நிறுத்துங்கள் என்று கூறி, போரினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த இஸ்ரயேல் மக்களுக்கு தன் ஆழ்ந்த இரங்கலையும் செபத்தினையும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அக்டோபர் 8 ஞாயிற்றுக்கிழமை திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளை செப உரையின் இறுதியில் இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஸ்ரயேல் மற்றும் பாலஸ்தீனத்தில் அமைதி நிலவ செபிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

போர் ஒரு தோல்வி: ஒவ்வொரு போரும் ஒரு தோல்வியே என்று வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துன்புறும் உக்ரைன் மக்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காக செபிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

நூற்றுக்கணக்கான மரணங்கள் மற்றும் காயங்களை ஏற்படுத்திய வன்முறை இன்னும் அதிகரித்து வரும் இஸ்ரேலில் என்ன நடக்கிறது என்பதை நான் அச்சம் மற்றும் வேதனையுடன் கவனித்து வருவதாக கூறிய திருத்தந்தை அவர்கள், வன்முறையினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தனது ஆன்மிக நெருக்கத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் எடுத்துரைத்தார்.



அக்டோபர் 7 சனிக்கிழமை ஹமாஸ்ஸில் நடந்த தாக்குதலினால் இதுவரை கொல்லப்பட்ட இஸ்ரேலியர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 600 ஆக உயர்ந்துள்ளது என்று ஹாரெட்ஸ் அறிக்கை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### புனித பூமியில் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு

புனித பூமியில் இடம்பெறும் போரால் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மிகுந்த மனவருத்தம் அடைந்துள்ளதாகவும், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமுற்றுள்ளோர் குறித்து தன் அனுதாபங்களையும் கவலையையும் வெளியிட்டுள்ளதாகவும் அறிவித்தார் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின்.

யூத கிறிஸ்தவ உறவுகளுக்கு அர்த்தம் கொடுக்கும் புதிய ஆதார ஏடுகள் திருத்தந்தை 12ஆம் பயஸின் ஆட்சிக்காலத்தில் இருந்து கிட்டியுள்ளது குறித்து உரோம் நகரின் கிரகோரியன் பாப்பிறைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மூன்று நாள் கருத்தரங்கில் பேசியபோது இவ்வாறு கூறினார் கர்தினால் பரோலின்.

யூதர்களின் சாபத் என்னும் ஓய்வு நாளான அக்டோபர் 7ஆம் தேதி இடம்பெற்ற பாலஸ்தீனிய தாக்குதல் குறித்து இக்கருத்தரங்கின் துவக்க உரையில் எடுத்துரைத்த கர்தினால், இம்மோதல்களில் உயிரிழந்தோரின் குடும்பங்கள், காயமடைந்த ஆயிரக்கணக்கானோர், காணாமல்போயுள்ளோர், கடத்தப்பட்டு பேராபத்தில் இருப்போர் ஆகியோர் குறித்து திருஅவை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும் அவர்களுடன் தன் நெருக்கத்தை வெளியிடுவதாகவும் தெரிவித்தார்.

புனித பூமியில் அனைத்து ஆயுதங்களும் மௌனமாக்கப்பட்டு, இஸ்ரயேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டும் என ஆவல் கொள்வதாகவும் தெரிவித்தார் திருப்பீடச் செயலர் கர்தினால் பரோலின்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

# 16-வது ஆயர் மாமன்றத்தில் மலேசிய பிரதிநிதி உரை

**வத்திக்கான் நகர் (AsiaNews)** – ஆசியாவின் துன்பங்கள் மற்றும் அதன் கொடைகளும் நேற்று வத்திக்கானில் உள்ள ஆயர் பேரவையில் ஹாங்காங்கில் இருந்து வந்த ஒரு பொதுநிலையினரான Focolare இயக்கத்தின் உறுப்பினருமான வனேசா செங் மற்றும் மலேசியாவின் அருள்பணி டாக்டர் கிளரன்ஸ் தேவதாஸ் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன

"இரண்டு வருட சமூக அமைதியின்மைக்குப் பிறகு ஹாங்காங் சமூகம் பிளவுபட்டுள்ளது என்றும், திருஅவையின் கூட்டொருங்கியக்கப் பயண (சினோடல்) செயல் முறையைத் தொடர்ந்து, ஹாங்காங் சமூகம் மீண்டும் அதன் பயணத்தைச் சீர் செய்யத் தொடங்கியுள்ளதாகவும்" கூட்டொருங்கியக்கப் பயணம் குணப்படுத்துவதற்கான பலனைத் தரும்" என்றும் தாம் அறிந்த அளவிலான அறிக்கையை மேற்கோள்காட்டி வனேசா செங் அறிக்கை சமர்ப்பித்தார்.



அருள்பணி டாக்டர் கிளரன்ஸ் தேவதாஸ்



வனேசா செங்

மலேசியாவின் பிரதிநிதியான அருள்பணி டாக்டர் தேவதாஸ் அவர்கள் "சிலர் எங்களைச் சிறுபான்மையினராகவும் முக்கியமற்றவர்களாகவும் கருதலாம். ஆனால் திருஅவையின் தனித்துவமான மற்றும் மதிப்புமிக்க பகுதியாக கிறிஸ்தவர்கள் உள்ளதாக நாங்கள் கருதுகிறோம். சிறுபான்மையினரானாலும், மனித சமுதாயத்தை கட்டியெழுப்பவும் சீர்திருத்த மாற்றங்கள் கொணரவும் நாங்கள் விழைகிறோம் என்றார்.

"ஆசியாவின் பல பகுதிகளில், திருஅவையானது ஒருங்கிணைந்த மனித மேம்பாடு மற்றும் பொது நன்மைக்கான சேவைகளில் முன்னணி வகிக்கிறது. குறிப்பாக கல்வி, நலவாழ்வு மற்றும் நமது திருஅவைக்குப் புறம்பே உள்ள ஏழைகளையும் விளிம்புநிலையில் வாழ்வோரையும் அதன் பலன்கள் சென்றடைகின்றன."

இங்கு உரையாடல் வாயிலாக பிற கிறிஸ்தவர்கள், பிற சமயத்தவர் மற்றும் மற்ற பண்பாடுகளைச் சேர்ந்தவர்கள், பழங்குடி மக்கள் இவர்கள் மத்தியில் ஆன்மீகம் உட்பட பலனளிக்கும் ஈடுபாட்டின் வழியாக பல அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறோம் என்று தரிவித்தார்.

திருஅவையின் உரையாடல்களுக்கான நோக்கங்கள் குறித்த அவநம்பிக்கை மற்றும் சந்தேகம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இந்த உரையாடல்களைப் பற்றி சிலர் சந்தேகக் கண்கொண்டு முறன்பாடான கருத்துக்களை வெளிப்படுத்தினர். ஆயினும்கூட, மனிதகுலத்தில் ஒற்றுமைக்காக, ஆசியாவின் பல பகுதிகளில் உள்ள திருஅவை அமைதி நல்லிணக்கம், நீதி மற்றும் சுதந்திரத்திற்கான பாலங்களைக் கட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

நிறைவாக, ஆசியாவில் உள்ள பல திருஅவை பங்குகளில் இருக்கும் அடிப்படை திருஅவை சமூகங்களின் (அ.தி.ச) அனுபவங்களை அருள்பணி தேவதாஸ் ஆயர் மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

*தமிழாக்கம்: ஆர்.கே.*

# உமக்கே புகழ் (*Laudate Deum*) சுற்றுச்சூழல் ஆவணத்தில் நமது பயணம்

(தொடர் கட்டுரை)

திருத்தந்தையால் கடந்த அக்டோபர் 4-ம் திகதி அதிகாரப்பூர்வமாக வெளியிட்ட *Laudate Deum* (உமக்கே புகழ்) என்னும் திருத்தூது அறிக்கை பற்றி இப்போது உலகளவில் அதிகமாகப் பேசப்படுகிறது. 2015-ஆம் ஆண்டு, திருத்தந்தை வெளியிட்ட 'ஆண்டவரே உமக்கே புகழ்' என்று பொருள் கொண்ட "Laudato Si" எனும் சுற்றுச் சூழல் பற்றிய தனது ஆவணத்தின் தொடர்ச்சியாக இந்த இரண்டாவது ஆவணத்தைத் திருத்தந்தை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

புனித பிரான்சிஸ் அசிசியார் உலகப் படைப்பின் மீது கொண்ட அக்கறை, அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் 'ஆண்டவரே உமக்கே புகழ்' என்று பொருள் கொண்ட "Laudato Si" வெளியிடப்பட்டது. அசிசி நகர் புனித பிரான்சிஸ், படைப்பை நோக்கியபோதெல்லாம், அவர், கடவுளின் உடனிருப்பையே தியானித்தார். உண்மையில், படைப்பு, நம் சகோதரர், சகோதரி என்றும், அப்புனிதர் கதிரவனை சகோதரர் என்றும், நிலவு மற்றும் அன்னை பூமியை, சகோதரி என்றும் அவர் அழைத்தார்.

இக்காலத்தில் ஐந்து கண்டங்களின் மக்களை வெகுவாகப் பாதித்துவரும் அண்மைக்கால தீவிர காலநிலை மாற்ற நிகழ்வுகளான பெரும் இயற்கை பேரழிவுகள் போன்றவற்றை மையப்படுத்தி திருத்தந்தை பதிந்துவரும் கருத்துக்களை உள்ளடக்கியதாக Laudato si' ஏட்டின் தொடர் பதிப்புதான் *Laudate Deum*.

பின்வருவன இந்த ஆவணத்தின் முக்கிய கருத்துக்களாகும்:

- **அறிக்கையை IPCC அறிக்கைகளிலிருந்து முக்கியத் தகவல்களைக் கோடிட்டுக் காட்டுகிறார்.**

  உலகளாவிய காலநிலை நெருக்கடி திருத்தந்தை பிரான்சிஸ் சமீபத்திய அரசுகளுக்கிடையிலான காலநிலை மாற்றத்திற்கான (The Intergovern mental Panel on Climate Change (IPCC) குழு அறிக்கையிலிருந்து அறிந்தவற்றை பகிர்ந்துள்ளார்.

- **வளர்ந்து வரும் தொழில்நுட்பம்**

  காலநிலை மாற்றத்திற்கான மனித காரணங்கள், தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத்தைச் சுற்றியுள்ள சிக்கல்களை திருத்தந்தை எடுத்துரைக்கிறார்.

- **அனைத்துலக அரசியலின் பலவீனம்**

  இதில் திருத்தந்தை பிரான்சிஸ் தற்போதைய அரசியல் ரீதியில் காணப்படும் பலதரப்பு பிரச்சனைகளைக் களைந்து, துணைபுரியும் மனப்பாங்கை கொண்டிருக்கும் அடிப்படையிலான அரசியலுக்கு அழைப்புவிடுக்கிறார்.

- **காலநிலை மாநாடுகள் -முன்னேற்றம் மற்றும் தோல்விகள்**

  கடந்த காலநிலைக்கான அமைப்புகளின் செயல்பாடுகள் உண்மையான மாற்றத்தைக் கொணரவில்லை, ஏமாற்றமே அதிகம்.

- **துபாயில் COP28 இலிருந்து என்ன எதிர்பார்க்கலாம்?**

  திருத்தந்தை பிரான்சிஸ், காலநிலை மாற்றத்திற்கான அர்ப்பணிப்புப் பணியானது கடுமையான, தீவிரமான மற்றும் அனைவரின் அர்ப்பணிப்புடனும் இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறார். உலகளாவிய ரீதியில், எரிபொருள் பயன்பாட்டில் காற்று தூய்மைக் கேட்டையும் வெப்ப நிலையையும் குறைக்கும் தேவைக்கான முயற்சியில் கவனம் வேண்டும் என்கிறார்.

- **ஆன்மீக உந்துதல்கள்**

  நம்பிக்கையுள்ள மக்களாகிய நாம் அனைவரும் நமது பொதுவான இல்லத்தை கவனித்துக்கொள்வதில் நம் பங்கைச் செய்ய முடியும் என்பதை நினைவூட்டுகிறார்.

- **திருத்தந்தையின் வலியுறுத்தல்.**

"இன்றைய காலநிலை அல்லது வெப்பநிலை அச்சுறுத்தலுக்கான நமது மறுமொழிகளும் நடவடிக்கைகளும் போதுமானதாக இல்லை என்பதை அவர் வலியுறுத்துகிறார். அதே சமயம் நாம் வாழும் உலகம் அழிவுப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு தீவிர சிகிச்சை தேவை.

- *ஆர்.கே.*

# பினாங்கு,அக்கினி முகாம் 2023

## இளைஞர்கள் மீது நம்பிக்கைத் தீயை ஒளிர்விப்பது.

பினாங்கு: கடந்த 30 செப்டம்பர் 2023 முதல் 1 அக்டோபர் 2023 வரை, பினாங்கு மாவட்ட தமிழ் இளைஞர்கள் "அக்கினி' எனும் ஒரு நாள் முகாமை ஏற்பாடு செய்திருந்தனர். அல்வினஸ் பிராயன் அவர்களின் தலைமையில் இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. ரினா டோமானி, லின்டா ஷாலினி மற்றும் பினாங்கு மாவட்ட தமிழ் இளைஞர் குழுவை சேர்ந்த அனைவரும் உதவி கரம் நீட்டி இம்முகாமை சிறப்பான வழியில் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 24 மணி நேர நிகழ்ச்சியில் 16 வெவ்வேறு பங்குகளில் இருந்து வந்த சுமார் 130 இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர், இது ஆன்மீக ரீதியாக செழுமையான அனுபவமாக மாறியது.



செப்டம்பர் 30 ஆம் தேதி இந்நிகழ்வு சிறப்பாக தொடங்கி வைக்கப்பட்டு, அங்கு ஒற்றுமை மற்றும் விசுவாசத்தின் அடையாளங்களான சிலுவை, திருவிவிலியம் மற்றும் மெழுகுவர்த்திகளை ஏந்தியபடி அனைத்து பங்கு பிரதிநிதிகள் முன்வந்தனர். இந்த முகாமிற்கு ஆன்மீக ரீதியிலான ஒரு தயார் நிலையை இதன் மூலம் பெற முடிந்தது.

தொடர்ந்து, அருட்தந்தை ரேமண்ட் ராஜ் அவர்கள் தமது மறையுரையில், நமது வாழ்க்கையில் தூய ஆவியாரின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டினார்,

தொடர்ந்து, பினாங்கு மாவட்ட தமிழ் இளைஞர்கள் குழுவின் ஆலோசகரான திரு சைமன் ஜோசப் அவர்கள் இம்முகாமின் மையக்கருத்தை ஒட்டி பல சிறந்த கருத்துக்களை இளைஞர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

புனித அன்னம்மாள் பேராலய சுற்றுப் புறத்தில் நடைபெற்ற "சிலுவை பாதை" இந்த நிகழ்வின் ஒரு முக்கிய சிறப்பம்சமாக அமைந்தது. சமீபத்தில் லிஸ்பனில் நடந்த உலக இளைஞர் தினத்தில் கலந்து கொண்ட சில தன்னார்வலர்களின் உத்வேகத்திலிருந்து இந்த தனித்துவமான கருத்து பகிரப்பட்டது.

தூய ஆவியாரின் வரவேற்பின் அடையாளமாக, இயேசு தூக்கிச் செல்லப்பட்டபோது நான்கு புறாக்கள் விடுவிக்கப்பட்டன. இந்த வழிபாட்டைத் தொடர்ந்து, இசை குழு தலைமையில் ஒரு டைஸே(Taize) அமர்வு மாலையில் நடத்தப்பட்டது. நள்ளிரவில் நற்கருணை ஆராதனை அருட்தந்தை நெல்சன் ஜோசப் அவர்களால் வழிநடத்தப்பட்டது.



அடுத்த நாள், அக்டோபர் 1 ஆம் தேதி, தைப்பிங் கத்தோலிக்க திருஅவையின் இளைஞர் மன்றத் தலைவரும் தன்னார்வலருமான ஜோசுவா ஜோயல் தலைமையிலான ஒரு சிந்தனை மீட்சி பிரதிபலிப்பு அமர்வுடன் முகாம் நிறைவடைந்தது. இரண்டு பாடல்கள் மற்றும் ABLAZE நிகழ்ச்சியின் "அக்கினியாய் இறங்கிடுவார்" மையப்பாடலுடன் முடிந்தது.



தொடர்ந்து இதுபோன்ற ஆன்மீக ரீதியிலான முகாம்கள் இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கையின் தீப்பிழம்புகளைத் தொடர்ந்து வளர செய்யும்.

# முன்மதியோடு செயல்படுவோம்!

இன்று பொது காலத்தின் 29ம் ஞாயிறு. நற்செய்தி வாசகம் ஓர் அரசியல் சூழ்ச்சி நிகழ்வாக அமைகிறது. இயேசுவை வீழ்த்த பரிசேயர்களுக்கு ஏரோது அந்திபாஸ் உதவுகிறான். தங்களது பொதுவான எதிரியை (இயேசு) வீழ்த்த இரு எதிரிகளும் கைகோர்க்கின்றனர். நரி (லூக்.13:32) என இயேசு வருணிப்பட்ட ஏரோது அந்திபாஸ் உரோமை ஆட்சியின் கைப்பாவையாக இருந்து கலிலேயா பகுதியை ஆட்சி செய்து வந்தான். பரிசேயர்களோ மோசே சட்டங்களைக் கடுமையாகக் கடைப்பிடிப்பவர்கள். இதனால் அந்நிய ஆட்சியாளர்க்குத் துணைப்போகும் ஏரோது அந்திபாசை பரிசேயர்கள் வெறுத்தனர், எதிர்த்தனர். திருமுழுக்கு யோவானை கொன்ற இந்த ஏரோது அந்திபாஸ், இயேசுவையும் கொல்ல எண்ணங்கொண்டிருந்தான் (லூக்.13:31). அதே வேளையில், தங்களுக்கு சிம்மச் சொப்பனமாக இருந்த இயேசுவைக் கொல்ல பரிசேயர்களும் வழித்தேடிகொண்டிருந்தனர் (மத்.26:3-4).

(பரிசேயர்கள்) தங்களது சீடரை ஏரோதியருடன் அவரிடம் (இயேசு) அனுப்பி, "போதகரே, நீர் உண்மையுள்ளவர்; எவரையும் பொருட்படுத்தாமல் கடவுளின் நெறியை உண்மைக்கேற்பக் கற்பிப்பவர்; ஆள் பார்த்துச் செயல்படாதவர் என்பது எங்களுக்குத் தெரியும். சீசருக்கு வரி செலுத்துவது முறையா? இல்லையா? (மத்.22:16-17) எனக் கேட்கிறார்கள்.

இந்த கேள்வியைக் கொண்டு இயேசுவை மடக்கி, அவர்களது வலையில் சிக்க வைக்க அவ்விரு தரப்பினரும் திட்டமிட்டனர். வரி செலுத்துவது முறை என்றால் யூத மக்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டும். இல்லை என்றால் ஆட்சியாளர்களுக்கு எதிராக செயல்படும் கலகக்காரன் என இயேசு கருதப்படுவார். ஆனால். இயேசுவின் பதிலோ அவ்விரு தரப்பினரையும் திகைப்புக்குள்ளாக்கியது. "சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" (மத்.22:21) என இயேசு பதிலளித்தார்.

இயேசுவின் பதில் கிறிஸ்துவர்களாகிய நமது நம்பிக்கைக்கு ஆதாரமாக இருக்கிறது. நாம் அனைவரும் மண்ணகத்தில் வாழ்ந்தாலும் நமது தாயகமோ வான்வீடு (பிலி.3:20). கடவுளுக்கு உரியவற்றில் நாம் மனவுறுதியோடு இருக்க வேண்டும் என இன்றைய நற்செய்தி வலியுறுத்துகிறது. கடவுளுக்கு உரிய காரியங்களின் நாம் உண்மையில் அக்கறையோடு செயல்படுகிறோமா? கடவுளுக்கு உரியவற்றை மறந்து அல்லது தவிர்த்து, மனம் போன போக்கில் வாழ்கிறோமா? உலகப்போக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறோமா?

உலக அரசாங்கத்திற்கு உரியவற்றை அவற்றுக்குக் கொடுத்து விடுவோம். அரசாங்கம் அமைக்கும் சட்டங்களையும் விதிமுறைகளையும் கடைப்பிடிக்கிறோம். கடைப்பிடிக்கத் தவறும் போது தண்டனை விதிக்கப்படுகிறது. ஆனால் ஆண்டவரே நமக்கு அரசர். இன்றைய திருப்பாடல் கூறுவது போல, அவரது பெயருக்குரிய மாட்சியைச் சாற்றுவோம் (திப.96:8). அவரது அன்புக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக அவருக்குரிய மாட்சியைச் சாற்றுவோம்.

இன்றைய இரண்டாவது வாசகம் வலியுறுத்தும் நம்பிக்கையையும் அன்பினால் உந்தப்பட்ட உழைப்பையும் (1தெச.1:3) நமது தாரகமந்திரமாக கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவராகிய கடவுள், சைரசிடம், "நானே ஆண்டவர்; என்னையன்றி வேறு கடவுள் இல்லை" என்பார். அப்படியானல், உண்மைக் கடவுளுக்கு உரியவர்களாகிய நாம், அவரிடம் நம்மை முழுவதும் ஒப்படைத்து அவரது ஆசியை நாடுவோம்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான், செர்டாங்*

**ஆண்டின் பொதுக்காலம் 29ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசா 45: 1, 4-6 |
| தி.பா | 96:1,3.4-5.7-8.9 10ac |
| 2-ம் வாசகம் | 1 தெச 1: 1-5a |
| நற்செய்தி | 22: 15-21 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 4**